**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

COS.No.6/2022 பெயர் : ஜெகநாத் நாள் : 09.09.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனது பூர்வீகம் தாராபுரம் ஆகும். தற்சமயம் பெங்களூரில் வசித்து வருகிறேன். நான் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் என்ற வகையில், எனக்கு பிரதிவாதி நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். வாதி நிறுவனத்துடன் பிரதிவாதி நிறுவனம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் தொடர்பான விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால், பெரும்பாலும் தெரியும், சில விபரங்கள் தெரியாது. வா.சா.ஆ.3-ல் கையொப்பம் செய்துள்ளவர் யார் என்றால், K.C.சேத்தன், Vice President கையொப்பம் செய்துள்ளார். வா.சா.ஆ.3-ல் உள்ள விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால், முழுமையாக தெரியாது, பெரும்பாலும் தெரியும். வா.சா.ஆ.3-ல் உள்ள விபரங்களில் பணம் சம்மந்தமான விபரம் பற்றி எனக்கு தெரியாது, முதல் 6 ஷரத்துக்கள் குறித்த விபரங்கள் எனக்கு தெரியும். பணம் சம்மந்தமான விபரம் தெரிந்த நபரை விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால், இல்லை, அச்சமயத்தில் வேலை பார்த்த நபர் எங்கள் நிறுவனத்தில் தற்போது பணிபுரியவில்லை. K.C.சேத்தன், Vice President அவர்கள் உங்கள் தரப்பில் விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால், Board-ல் முடிவு செய்து தான் சொல்ல முடியும். என்னுடைய சாட்சியம் வாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் சம்மந்தமான முழுமையான சாட்சியம் இல்லை என்று சொன்னால், சரியல்ல. சாட்சியம் அளிப்பதற்கு வருவதற்கு முன்பு இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்களை பரிசீலித்தேனா என்றால், பரிசீலித்தேன். நான் பரிசீலித்த ஆவணங்களில் கணக்கும் அடங்கும் என்றால், சரிதான். மேற்படி விபரங்களை எனக்கு

மின் அஞ்சல் மூலம் அறிவிப்பு வந்ததிலிருந்து பரிசீலனை செய்தேன். கடைசியாக 3 நாட்களுக்கு முன்பாக கணக்குகளை பரிசீலித்தேன். எங்களது நிறுவனத்தின் வரவு, செலவுகள் அனைத்தும் கணினி மையமாக்கப்பட்டவை என்றால், சரிதான். எங்கள் நிறுவனத்தின் தகவல்களை மின் அஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்துக்கொள்வோம் என்றால், சரிதான். மின் அஞ்சல் தகவல்கள் நிரந்தரமானவை என்றால், சரிதான். அந்த தகவல்களை எப்போது வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் என்றால், சரிதான். வாதி நிறுவனத்துடன் எங்கள் நிறுவனம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் ஆதார் Enrolment Project சம்மந்தமானது என்றால், சரிதான். எங்கள் நிறுவனம் ஆதார் Enrolment Project-ல் ஒரு ஏஜென்சி என்றால், சரிதான். எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஏஜென்சி Code 1189 என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எங்களுக்கு ஏஜென்சி கொடுத்தது யார் என்றால், UIDAI Unique Identification Authority India ஆகும். எங்கள் நிறுவனத்திற்கு UIDAI ஏஜென்சி வழங்கவில்லை என்றாலும், பதிவாளர்கள் தான் வழங்கினார்கள் என்றால், சரியல்ல. Bank of Baroda, Department of Posts ஆகியவை உங்களுக்கு பதிவாளர்களாக இருந்தார்கள் என்றால், சரியல்ல.

எங்கள் நிறுவனத்திற்கும் Bank of Baroda, Department of Posts ஆகியவைகளுக்கும் நேரடியாக தொடர்பு உள்ளதா என்றால், உள்ளது. அவர்கள் பதிவாளர்கள், எந்தெந்த இடத்தில் எந்த மாநிலம் மற்றும் எந்த இடத்தில் ஆதார் Enrolment Project செய்யப்பட வேண்டும் என எங்களுக்கு தெரிவிப்பார்கள். ஆதார் Enrolment Project என்பது Government of India Planning Commission-ன் மூலமாக செயல்படுத்தி வருகிறது என்றால், எனக்கு தெரியாது. எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஏஜென்சி என்பது பொதுமக்களிடம் விபரங்கள் சேகரித்து, அவர்களுக்கு ஆதார் அட்டை வழங்குவதற்கான விபரங்களை பதிவு செய்வதற்கானதாகும் என்றால், சரிதான். எங்கள்

நிறுவனத்திடம் மேற்படி விபரங்களை பதிவு செய்வதற்கான வசதி இருந்ததா என்றால், இருந்தது, பகுதி நேரடியாகவும், மீதி வெளியில் கொடுத்து விடுவோம். வெளியே Man Power Source பெற்று, அதை பதிவுகள் செய்வதற்காக ஏற்பாடு செய்த வகையில், வாதி நிறுவனத்துடனும் ஒப்பந்தம் செய்துக்கொண்டீர்கள் என்றால், சரிதான். அந்த ஒப்பந்தத்தின் படி வாதி நிறுவனம் நபர்களையும், அதற்கு தேவையான கருவிகளையும் வழங்கினார்கள் என்றால், எங்களுக்கு தேர்ச்சி பெற்ற நபர்களை மட்டும் வழங்கினார்கள். மேற்படி நபர்களுக்கு எங்கள் நிறுவனம் பயிற்சி வழங்கியது. அந்த நபர்கள் SIFI என்ற தேர்வில் தேர்ச்சி பெற்றால், UIDAI-ல் அடையாள எண் வழங்குவார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. குறிப்பான அடையாள எண் கொண்ட நபர்கள் மட்டுமே அந்த இயந்திரங்களை அடையாள எண் கொண்டு திறந்து பதிவுகள் செய்ய முடியும் என்றால், சரிதான். வாதியிடம் ஒப்பந்தம் செய்துக்கொண்டது போல் வேறு நிறுவனங்களுடன் இதே போன்ற ஒப்பந்தம் செய்துக்கொண்டோம் என்றால், சரிதான்.

உங்களுக்கு Enrolment Centre தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களில் வழங்கப்பட்டது என்றால், சரிதான். அந்த Centre-ல் கருவிகளை Instal செய்தால் அந்த கருவிகளுக்கு Station ID கொடுப்பார்கள் என்றால், சரிதான். ஒவ்வொரு Station-லிருந்தும் Entrolment செய்த விபரங்கள் CIDR Server-க்கு Upload செய்யப்படும் என்றால், சரிதான். CIDR Server-ல் குறிப்பாக ECMP என்ற Software பயன்படுத்தப் பட்டுள்ளது என்றால், எந்த Software பயன்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஒவ்வொரு Enrolment Centre-களிலும் Instal செய்யப்படும் கருவிகளை இயக்குபவர்கள் ஆப்ரேட்டர்கள் என்றும், அதை மேற்பார்வை செய்பவர்கள் சூப்பர்வைசர் என்றும், வாதி நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட்டார்கள் என்றால், அவர்கள் சூப்பர்வைசர் வைத்தார்களா என்று எங்களுக்கு தெரியாது, எங்கள் நிறுவனத்திலிருந்து சூப்பர்வைசர்கள்

சென்றார்கள். Enrolment Centre-ல் ஆதார் பதிவிற்கு வரும் நபர்களிடமிருந்து அவர்களுடைய Demo Graphic Details வாங்கி அதை பதிவு செய்வார்கள், பின்னிட்டு அந்த நபர்களுடைய கைரேகை மற்றும் கண் கருவிழி ஆகியவற்றை Bio Matric இயந்திரம் மூலம் பதிவு செய்வார்கள் என்றால், சரிதான். மேற்படி பதிவு செய்யப்படும் விபரங்கள் ஒரு நபரின் Enrolment Packet என்றால், எனக்கு தெரியாது. Enrolment பதிவுகள் Off Line-ல் செய்யப்படும் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஒரு Enrolment Centre-ல் ஒரு Unit-ல் பதிவு செய்யப்படும் Enrolment Packet விபரங்களை சூப்பர்வைசர் சரிபார்ப்பார் என்றால், அது தவறு. அதை Card Disk-ல் எடுத்து CIDR Server-க்கு Online-ல் அனுப்புவார்கள் என்றால், சரிதான். CIDR Server விபரங்கள் சரியாக இருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளும், இல்லாவிட்டால் Reject செய்துவிடும் என்றால், சரிதான். ஏற்றுக்கொள்ளப்பட்ட Enrolment Packet இறுதியில் ஆதார் எண்களாக மாற்றப்பட்டு, ஆதார் அடையாளம் கொடுக்கப்படும் என்றால், சரிதான். வாதி நிறுவன ஊழியர்கள் ஒவ்வொரு Enrolment Centre-லும் பதிவு செய்யப்படும் தினசரி பதிவுகளை பதிவேற்றம் செய்யும் போது, அதன் நகல்களை உங்களுக்கும் அனுப்பி வைப்பார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. தினமும் அனுப்புவது மட்டும் இல்லாமல், ஒவ்வொரு மாத இறுதியிலும் மொத்தமாக அவர்களால் பதியப்பட்ட Enrolment Packet-ஐ பற்றிய விபரங்களை உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் அந்த விபரங்களை வைத்துதான் வாதிக்கு செலுத்தவேண்டிய தொகையை முடிவு செய்வீர்கள் என்றால், தவறு. அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகளை எதை வைத்து நீங்கள் முடிவு செய்வீர்கள் என்றால், UIDAI எங்களுக்கு அறிக்கை கொடுப்பார்கள் அதை வைத்து நாங்கள் முடிவு செய்வோம்.

எங்களுக்கு எங்களது பதிவாளர் கொடுத்த அறிக்கைகளை வைத்து வாதி நிறுவன ஊழியர்கள் எவ்வளவு Enrolment பதிவுகள் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரிய வரும் என்றால், சரிதான். நான் பதிவாளர்கள் கொடுத்த அறிக்கைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் வாதி நிறுவன ஊழியர்கள் பதிவு செய்த Enrolment பற்றிய விபரம் உள்ளதா என்றால், குறிப்பிட்டு வாதி நிறுவனம் பற்றிய விபரங்கள் இல்லை. பொதுவான விபரங்கள் பற்றி மட்டுமே பி.வா.சா.ஆ.2-ல் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் பி.வா.சா.ஆ.2 பற்றிய விபரங்கள் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஒரு Enrolment Packet-க்கு ரூ.25/- கொடுத்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது என்றால், சரிதான். அக்ரிமெண்ட்-ல் வேலை ஆரம்பித்த 45 நாட்களுக்கு தொடர்ச்சியாக ஒரே பில்லாக 5 வாரங்களுக்குள் Payment செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் அடுத்து வரும் ஒவ்வொரு மாதத்திற்கும் பில் தொகை செலுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு தினமும் அனுப்பப்படும் மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படும் மின் அஞ்சல் அறிக்கை பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியாது. Managing Director-க்கு அனுப்பப்படும் மின் அஞ்சல் யாருக்கு வரும் என்றால், எனக்கு வரும். என்னிடம் காட்டப்படுவது வாதி நிறுவனம் செய்த சர்வீஸ்-க்கு தொகை கேட்டு உங்கள் நிறுவனத்திற்கு 2013 முதல் 2017 வரை மின் அஞ்சல்கள் அனுப்பப்பட்டன என்றால், நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது எனக்கு தெரியாது. உங்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட்டது என்றால், சரிதான். எனக்கு வரப்பெற்ற மின்

அஞ்சல்களுக்கு நான் அனுப்பிய பதில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், இல்லை. வாதி நிறுவனத்திற்கு எந்தெந்த Enrolment Centre-களுக்கு பணிக் கொடுத்தோம் என்ற விபரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், தாக்கல் செய்யவில்லை. வாதி நிறுவனம் செய்த பணிக்குறித்து அனுப்பிய அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், எனக்கு தெரியவில்லை. வாதி நிறுவனம் செய்த பணிக்கு எந்தெந்த நாட்களில் எவ்வளவு தொகை செலுத்தியுள்ளீர்கள் என்பதை பற்றி கணக்குகள் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், தெரியவில்லை. நாங்கள் வாதி நிறுவனத்திற்கு தொகை செலுத்தியுள்ளோமா என்றால், Online (RTGS, NEFT) அல்லது காசோலை மூலமாக செலுத்தியுள்ளோம்.

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பத்தி 3-ல் வா.சா.ஆ.3 ஒப்பந்தம் அடிப்படையில், பணிகள் கொடுக்கப்பட்டது என்றும், பின்னிட்டு ஈரோடு மாவட்டத்திலும், தமிழ்நாட்டில் வெவ்வேறு இடங்களிலும், கர்நாடகாவிலும் தேவைக்கு ஏற்றாற்போல், பணிகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த வேலைகளை வாதி நிறுவன ஊழியர்கள் செய்தார்கள் என்றால், சரிதான். வழக்குரையில் பத்தி 3-ல் கூறப்பட்ட விபரங்களைப் பொறுத்து, நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு மறுக்கப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்குரை பத்தி 4-ல் உள்ள கூறப்பட்ட விபரங்களைப் பொறுத்து, எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு மறுக்கப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி நிறுவனத்திற்கு கடைசியாக 06.01.2015 அன்று ரூ.10 லட்சம் RTGS மூலமாக வாதி நிறுவனத்தின் வங்கிக்கு அனுப்பியுள்ளீர்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக வாதி நிறுவனம் சார்பில் வங்கி மேலாளர் மூலம் உங்கள் நிறுவனத்திலிருந்து வாதி

நிறுவனத்திற்கு தொகை அனுப்பப்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவனம் ஈரோடு மாவட்டத்தில் தான் உள்ளது என்றால், சரிதான். ஈரோடு மாவட்டத்தில் வாதி நிறுவன ஊழியர்களுக்கு உங்கள் நிறுவனம் வேலை கொடுத்தது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன் தொடர்ச்சியாக கர்நாடகா மாநிலத்தில் உள்ள பெல்லாரி மாவட்டத்தில் பணி செய்ய ஒப்பந்தப்பணி கொடுத்தீர்கள் என்றால், சரிதான். வாதி நிறுவன ஊழியர்கள் செய்த பணிக்காக அவர்களுக்கு உங்கள் நிறுவனத்திலிருந்து உங்கள் வங்கி மூலமாக ஈரோட்டில் உள்ள வாதி நிறுவன வங்கி கணக்கிற்கு தொகைகள் அனுப்பியுள்ளீர்கள் என்றால், சரிதான். வாதி நிறுவனத்திற்கு நீங்கள் செலுத்தவேண்டிய பாக்கித்தொகையை மறுக்க முடியாது என்று சொன்னால், சரியல்ல, செலுத்தவேண்டிய தொகையை சரியாக செலுத்திவிட்டோம். அதற்கான கணக்கு விபரங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், ஞாபகம் இல்லை. வாதி நிறுவனம் செய்துள்ள பணியில் குறைபாடு உள்ளதாக கூறியிருப்பது தவறு என்று சொன்னால், சரியல்ல. நான் எங்கள் நிறுவனத்தின் சார்பாக தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், குறிப்பான கேள்விகளுக்கு தெரியாது என்று பதிலளித்துள்ளீர்கள் என்று சொன்னால், சரியல்ல. நான் பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால், சரியல்ல. வாதி நிறுவனத்திற்கு எங்கள் நிறுவனம் கொடுக்க வேண்டிய தொகைக்கான கடப்பாட்டிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல. வாதி நிறுவன ஊழியர்கள் செய்த பணியில் எந்த குறைபாடுகளும் இல்லை என்று சொன்னால், சரியல்ல, பணியில் குறைபாடு இருந்ததால்தான் எங்கள் நிறுவனத்திற்கு வரவேண்டிய தொகை வரவில்லை.

(மேற்படி குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட கேள்விகள் குறித்து, பெரும்பாலான

கேள்விகள் அனைத்தும் வழக்குரையில் சொல்லப்படாத விபரங்கள் என்பதால், பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது).

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**